KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 30.05.2012

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 30.05.2012 | 235 | **பொருள் எண் 1**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 8-வது வார்டு பகுதி பரந்து விரிந்த அதிக தெருக்களை கொண்ட வார்டு ஆகும். 8-வது வார்டு பகுதி மக்களுக்கு நகராட்சி சம்பந்தமான செய்திகளையும் மற்றும் அரசின் மற்ற பல செய்திகளையும் பொது மக்களுக்கு ஏதுவாக சென்றடையும் பொருட்டு சில குறிப்பிட்ட பகுதிகளில் நகராட்சியின் சார்பாக அறிவிப்பு பலகை வைத்திட நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்ட 8-வது வார்டு உறுப்பினர் திருமதி.எம்.எம்.டி.பீவி பாத்திமா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகராட்சியின் மூலம் அறிவிப்பு பலகை வைத்திட மன்றம் தீர்மானிக்கலாம | பொாருள் எண்1<br>நகராட்சியின் மூலம் அறிவிப்பு பலகை நிறுவ ஏற்ற இடத்தை உறுப்பினர் பரிந்துரை அடிப்படையில் இடத்தினை தேர்வு செய்து நிறுவ மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 236 | **பொருள் எண்: 2**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 8-வது வார்டு பகுதியான சுலைமான் நகர் (மாட்டுக்குளம்) வருடா வருடம் மழை காலங்களில் இப்பகுதிகளில் மழைநீர் தேங்கி பொது மக்களுக்கு அதிகாமான இன்னல்களையும், சுகாதார கேடுகளையும் ஏற்படுத்துகின்றன. இக்கலாங்களில் நகராட்சியிலிருந்து இம்மழை நீரினை வடிய வைப்பதற்காக பல இலட்சங்கள் செலவிடப்பட்டு தற்காலிக பணிகள் வருடா வருடம் | பொருள் எண் 2 தமிழக அரசின் IUDM திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் (2012-2013) மழைநீர் வடிகால் வகைக்கு (STORM WATER DRAINAGE) நிதி வழங்கப்பட்டுள்ளது. அந்நிதி மூலம் திட்டங்களை நிறைவேற்ற இடங்களை |

| | | | |
|---|---|---|---|
| | | நடைபெற்று வருகிறது. ஆகவே இப்பகுதியிலிருந்து மழைநீர் செல்வதற்கு நிரந்தர தீர்வாக சுலைமான நகரிலிருந்து சல்லி திரடு வழியாக ஓடக்கரை உப்பு ஓடை வரைக்கும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்து தர கேட்டுக் கொண்ட 8-வது வார்டு உறுப்பினர் திருமதி.எம்.எம்.டி.பிவி பாத்திமா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பார்வையிட்டு மன்றத்தின் முடிவிற்கு. | தேர்வு செய்யும் போது 8 வதுவார்ட் உறுப்பினர் பரிந்துரைத்துள்ள சுலைமான் நகர் (மாட்டுக்குளம்) பகுதியையும் பரிசீலித்து முடிவு செய்யலாம் |
| | 237 | **பொருள் எண்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சி 10-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளான அலியார், தெரு, பாரிமார் தெரு, சின்ன நெசவுத் தெரு, திருச்செந்தூர் ரோடு பகுதியில் உள்ள பழுதான மின் கம்பங்கள் மாற்றித் தரவும், பரிமார் தெருவியில் உள்ள மீன் மார்க்கெட் சுகாதார கேட்டிலிருந்து காக்கும் பொருட்டு தினசரி மருந்து தூவி தூய்மை படுத்திடவும், காயல்பட்டணம் நகராட்சியில் வெளியில் இருந்து புரோக்கர்களாக செயல்படும் சில நபர்கள் வீட்டு வரி, பெயர்மாற்றம் போன்றவைகள் தவறான முறையில் கையாளப்படுகிறது அதனால் நகராட்சி அலுவலர்கள் அடிக்கடி நீதி மன்றத்தை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் மேலும் இதனால் பொது மக்களும் அவர்களிடம் பணம் கொடுத்து ஏமாறும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் இதனை கவனத்தில் கொண்டு அந்த பகுதி உறுப்பினர்களின் உறுதுனையோடு விசாரணை செய்து மேற்கண்டுள்ள இனங்களை பொது மக்களுக்கு செய்து வழங்கிடவும், சொத்து | பொருள் எண் 3 இப்பொருள் குறித்த அலுவலக குறிப்பை மன்றம் ஏற்றுக் கொள்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | | வரி ரசீதுகள் ஏற்கனவே செலுத்தப்பட்ட ரசீதை கொண்டு அடுத்த ஆண்டுக்குரிய ரசீதினை பெற அனுமதிக்கவும் கேட்டுக் கொண்ட 10-வது வார்டு **S.M.B.**பதுருல் ஹக் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>(1) பழுதான மின்கம்பங்களை நகராட்சி மூலம் மாற்றிட இயலாது எனவே பழுதான மின்கம்பங்களை மாற்ற தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பரிந்துரை செய்யலாம்.<br>(2) மீன் மார்க்கெட் தினசரி துய்மை படுத்தி மருந்து தூவிட வழிவகை செய்யலாம்.<br>(3) நகராட்சிக்கு புரோக்கர்களாக வரும் நபர்களை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், சொத்து வரி ரசீதுகளை வீடுகளின் உரிமையளராக இல்லாத சில நபர்கள் ரசீது ஏதும் இல்லாமல் செலுத்தும் பொழுது அதனை அவர்கள் தவறான வழியில் பயன்படுத்த வழிவகை உள்ளது. எனவே ஏற்கனவே சொத்து வரி செலுத்தப்பட்ட ரசீது அல்லது அதன் நகல்களை வழங்கும் நபர்களுக்கு மட்டும் சொத்து வரி ரசீது வழங்கவும், அதனை தவறவிட்டவர்களுக்கு நகராட்சி மூலம் கேட்பு அறிவிப்பு வழங்கிய பின்னரே ரசீது வழங்கிடவும் அனுமதிக்கலாம். | |
| | 238 | **பொருள் எண்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 4-வது வார்டு தொடர்பாக இதுவரை நகராட்சியில் வைத்த கோரிக்கைகளை துரிதமாக நிறைவேற்ற கேட்டுக் கொண்ட 4-வது வார்டு உறுப்பினர் திருமதி.ஏ.டி.முத்து ஹாஜரா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 4<br>மன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களையும் துரிதமாக அமல்படுத்தி அவைகளின் நிலை குறித்து அடுத்த நகர்மன்றக் கூட்டத்தில் தெரிவிக்க நகராட்சி ஆணையரை இம்மன்றம் கேட்டுக் கொள்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 239 | **பொருள் எண் 5**<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதி 9-வது வார்டு இதுவரை நகராட்சியில் வைத்த கோரிக்கைகளை துரிதமாக நிறைவேற்ற கேட்டுக் கொண்ட 9-வது வார்டு உறுப்பினர் திருமதி.ஹைரிய்யா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 5<br>மன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களையும் துரிதமாக அமல்படுத்தி அவைகளின் நிலை குறித்து அடுத்த நகர்மன்றம் கூட்டத்தில் தெரிவிக்க நகராட்சி ஆணையரை இம்மன்றம் கோருகிறது |
| | 240 | **பொருள் எண் 6**<br>காயல்பட்டணம் நகராட்சி 14-வது வார்டு பகுதியில் 9 நாட்களுக்கு ஒருமுறை வரும் குடிநீரினை சீர் செய்திடவும் தண்ணீரே வராத பகுதிகளுக்கு குடிநீர் வழங்கிடவும், தெரு விளக்கு பணிகளை உடனடியாக சரி செய்ய ஏற்பாடு செய்திடவும், சாலை வசதி அமைத்து தரும்படி ஆவண செய்யவும், மின் மோட்டார் வைத்து குடிநீர் உரிஞ்சுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொண்ட 14-வது வார்டு உறுப்பினர் திருமதி.பாக்கியஷீலா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். மின் மோட்டார் வைத்து குடிநீர் உரிஞ்சுபவர்களை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் தீர்மானிக்கலாம். | பொருள் எண் 6<br>நகரின் அனைத்து பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் வழங்கப்படும் தினம் மற்றும் நேரத்தினை அட்டவணையாக வெளியிட நகர்மன்றம் தீர்மானிக்கிறது. மோட்டார் மூலம் குடிநீர் பெறுவதாக பெறப்படும் புகார்களின் அடிப்படையில் உடனடி நடவடிக்கை எடுக்க இம்மன்றம் ஆணையரைக் கேட்டு கொள்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | 241 | **பொருள் எண் 7**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுநிதி பணிகள், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டப்பணிகள், பிளாஸ்டிக் சாலைகள் திட்டப்பணிகள, SFC- உட்கட்டமைப்பு மற்றும் வெற்றிடம் நிரப்பும் நிதி மற்றும் தண்ணிறைவுத்திட்டம் போன்ற திட்டங்களில் நடைபெறும் திட்டப்பணிகளை மேற்பார்வையிடவும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2012-2013, பொது நிதி திட்டம் 2012-13 மற்றும் IUDM திட்டம் 2012-2013 முதல் 2015-2016 வரை மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டியிருப்பதாலும் பொது நிதித் திட்டம் 2011-2012, OPEN DEFECATION 2011-12, மற்றும் IUDM 2011-12-க்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதாலும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு உதவியாக தொழில்நுட்ப உதவியாளர் எவரும் இல்லாததாலும் ஏற்கனவே நகராட்சியில் தொழில் நுட்ப உதவியாளராக பணியாற்றி வரும் திரு.கே.செந்தில்குமார் என்பவரை 01.06.2012 முதல் 31.08.2012 வரை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி பணிமேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.30,000/- மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.கே.செந்தில் குமார் என்பவரை 01.06.2012 முதல் 31.08.2012 வரை பணியமர்த்திக் கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.30000-க்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 7<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 242 | **பொருள் எண் 8**<br>காயல்பட்டணம் நகராட்சி ஊர் கடல் பகுதியில் கடல் சீற்றத்தின் காரணமாக மற்றும் கடல் கொந்தளிப்பு சுனாமி இது போன்ற பல காரணங்களால் நமது கடல் கரை பகுதியை அறிக்காமல் அருப்பதற்காகவும் நமது ஊர் மக்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கு கடல் பகுதியில் பீச் கடற்கறையில் இருந்து கடையக்குடி கொம்புத்துறை வரையில் கடலில் கல் தொடுத்து தூண்டில் பாலம் அமைத்திடவும், கற்புடையார் பள்ளி வட்டம் சிங்கித்துறையில் உள்ள வலை பின்னும் கூடாரம் தரைப்பகுதி மிகவும் பழுதடைந்து விட்டதால் அதை சீரமைத்து தரும்படியும், கற்புடையார் பள்ளி வட்டம் சிங்கித்துறையில் தண்ணீர் குழாய்களில் தண்ணீர் சரியாக வராத காரணத்தினால் ஒவ்வொரு பகுதியிலும் தனித்தனியாக கேட்டு வால்வு ஒழுங்கு செய்து தண்ணீர் சரிவர கிடைக்க ஆவண செய்யும்படியும், கடற்கரையில் இருந்து சிங்கித்துறை வடக்கு பகுதியில் உள்ள கடற்கரை ஓரங்களில் உள்ள முட்செடிகளை வெட்டி அகற்றி கடற்கரை சுத்தமாக இருக்க கேட்டுக் கொண்ட 7-வது வார்டு உறுப்பினர் திரு.J.அந்தோணி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 8<br><br>அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 243 | **பொருள் எண் 9**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 13-வது வார்டில் மின்கம்பங்கள் இல்லாத இடத்தில் மின்கம்பங்கள் அமைத்து அதில் குழல் விளக்குகள் பொருத்தும்படியும், மின்கம்பங்கள் இருந்தும் குழல் விளக்குகள் இல்லாத மின்கம்பங்களில் மின்விளக்கு பொருத்திடவும், எல்.எப்.ரோடு ஜெய்லானி நகரில் ரோடு தென்புறத்திலிருந்து வடபுறமாக தார் சாலை உள்ளது. அது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஆகவே இந்த இடத்தில் புதிய தார்சாலை அமைத்த தரும்படியும், ஆடு அறுப்புத் தொட்டி வளாகத்தில் ஆடு அறுத்து கழுவுவதற்கு நல்ல தண்ணீர் தேவைப்படுகிறது எனவே அங்கு ஒரு தண்ணீர் தொட்டி அமைத்து தரும்படியும் கேட்டுக் கொண்ட 13-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எஸ்.எம்.சம்சுதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 9<br><br>இப்பொருள் குறித்த அலுவலக குறிப்பை மன்றம் ஏற்றுக் கொள்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | 244 | **பொருள் எண் 10**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 15-வது வார்டு பகுதி தொடர்பாக கடந்த ஐந்து மாத காலமாக கொடுக்கப்பட்ட கோரிக்கைகள் தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்ட எந்த கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை அதனை துரிதமான நிறைவேற்றவும், கடந்த 16.05.2012 நள்ளிலவு 10.30 மணியளவில் 15-வது வார்டு பகுதியான வடக்கு உச்சினிமாகாளி கோவில் தெருவில் புதிய குடிநீர் இணைப்பு தோண்டுவதாக பொதுமக்கள் அளித்த புகாரின் பேரில் நான் குடிநீர் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் முறையிட்டேன். இதுவரையிலும் இது சம்பந்தமாக எந்த விதமாக தகவலும் எனக்கு தரவில்லை புதிய குடிநீா இணைப்போ போர்பிட் சரிபார்க்கும் போது அந்தந்த வார்டு கவுன்சிலர் பார்வைக்கு செல்லவேண்டுமென சென்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன என்று கேட்டுக் கொண்ட 15-வது வார்டு உறுப்பினர் திரு.ஜமால் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**.அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 10<br>மன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களையும் துரிதமாக அமல்படுத்தி அவைகளின் நிலைகுறித்து அடுத்த நகர்மன்றக் கூட்டத்தில் தெரிவிக்க நகராட்சி ஆணையரை இம்மன்றம் கோருகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 245 | **பொருள் எண் 11**<br>காயல்பட்டணம் நகராட்சி தினசரி கணிணி மைய வசூல் தொகையினை மாலை 5.45 மணிக்கு மேல் பாதுக்காப்பாக அலுவலகத்தில் வைத்து பாதுகாக்க பாதுகாப்பு பெட்டகம் மிகவும் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளது. எனவே தினசரி வசூல் தொகையையும் நகராட்சி வங்கியில் நிரந்தர வைப்புத் தொகை (Fixed Deposit) படிவங்களை பாதுகாப்பாக வைக்க பாதுகாப்பு பெட்டகம் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 11<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 246 | **பொருள் எண் 12**<br>காயல்பட்டணம் நகராட்சியில் தற்பொழுது Internet மற்றும் Server லைன்களை இணைக்கும் பொருட்டு ஒரு Network Card மற்றும் கணிணி பரிவில் தற்பொழுது இயங்கி கொண்டிருக்கும் அனைத்து கணிணிகளை Virus-லிருந்து பாதுகாக்கும் பொருட்டு Anti Virus மென்பாருள் 3 User இரண்டு எண்ணமும் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.3000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 12<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 247 | **பொருள் எண் 13**<br>காயல்பட்டணம் நகராட்சி 16-வது வார்டு பகுதியில் எரியாத தெரு விளக்குகளை சீரக எரிய செய்திட வழிவகை செய்திடவும், வார்டு தோறும் தெருப் பெயர் பலகைகள் அமைத்திடவும், மருத்தவமனையில் No Parking Board அமைத்திடவும், மருத்துவமனை சாலை, மேலப்பள்ளி சாலை, பைபாஸ் சாலை, புதுப்பள்ளி மையவாடிக்கு அருகில், சதுக்கை ரோடு, ஐ.சி.ஐ.சி.ஐ சந்திப்பு ஆகிய இடங்களில் உள்ள தெருவிளக்குகள் கடந்த சில மாதங்களாக எரியவில்லை அதனை உடனடியாக சீர் செய்திடவும், மருத்துவர் தெரு சாலையில் உள்ள பேராபத்தினை விளைவிக்கும் பாதாள ெபது குடிநீர்த் தொட்டியை நீக்கிவிட்டு அடிபம்பு அமைத்திடவும், சாலையில் சுற்றித் திரியும் ஆடு, மாடு மற்றும் தெரு நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும், பேருந்து நிலையம் அருகில் உள்ள நான்கு சாலையின் சந்திப்பில் காலை 7 மணி முதல் 10 மணி வரை கட்டிடத் தொழிலாளர்கள் பிரித்து அனுப்பும் வேலை நடைபெறுகிறது இவ்விடத்தில் கட்டிடத் தொழிலாளர்கள் 100 நபர்களுக்கு மேல் கூடுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் நிலை உள்ளது எனவே அவர்களை பேருந்து நிலைய வளாகத்தில் மாற்றியமைக்கவும், மேலும் இவ்விடத்தில் கோழி வியாபாரம் நடைபெறுவதால் போக்குவரத்தி நெரிசல் ஏற்படுகிறது அதனையும் வேறு இடத்திற்கு மாற்ற ஆவண செய்யவும், தைக்கா தெரு மற்றும் ஐசிஐசிஐ வங்கி சந்திப்பில் வேகத்தடை அமைத்து தரவும், நகராட்சி காலிப்பணியிடங்கள் மற்றும் நகாரட்சிக்கான தோற்றுவிக்க வேண்டிய புதிய பணியாளர்கள் பணியிடத்தினை தீர்மானம் வடிவில் அரசினை கேட்டுக் கொள்ளவும், மின்சார தட்டுப்பாடு காரணமாக குடிநீர் பம்பிங் செய்யும் இடத்தில் நமது நகராட்சி சார்பாக ஒரு புதிய ஜெனரேட்டர் அமைத்து கொடுக்கும்பட்சத்தில் மின்தடையில்லாமல் | பொருள் எண் 13<br><br>மன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களையும் துரிதமாக அமல்படுத்தி அவைகளின் நிலை குறித்து அடுத்த நகர்மன்றக் கூட்டத்தில் தெரிவிக்க நகராட்சி ஆணையரை இம்மன்றம் கோருகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | குடிநீர் சீராக கிடைத்திட வழிவகை செய்திட இயலும் இதனை போர்கால அடிப்படையில் நிறைவேற்றிடுமாறும் கேட்டுக் கொண்ட 16-வது வார்டு உறுப்பினர் திரு.S.A.சாமு சிகாப்தீன் ஹாஜி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | |
| | 248 | **பொருள் எண் 14**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சி அலுவலகத்தில் ஆணையருக்காக தயார் செய்யப்படும் அறை மற்றும் பொறியாளர் அறை இருக்கும் கட்டிடத்தில் (வடக்கு பகுதி கட்டிடம்) உள்ள மின் இணைப்புகளில் பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் அக்கட்டிடத்தில் உள்ள மின் இணைப்புகளை சரி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 14<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 249 | **பொருள் எண் 15**<br>காயல்பட்டணம் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் கோரிக்கைகள்.<br>1. காயல்பட்டணம் நகராட்சியின் முக்கிய அறிவிப்புகள் விரைவாக மக்களை சென்றடைய ஒரு வார்டு ஒரு தகவல் பலகை என்ற விகிதத்திலும் அது தவிர மக்கள் கூடும் முக்கிய இடங்களான நகராட்சி வளாகம், பேருந்து நிலையம், தபால் நிலையம் மற்றும் கடற்கரையிலும் தகவல்பலகை அமைத்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br>2. நகராட்சி மேல்நிலை தொட்டிகள் மூலம் வழங்கப்படும் குடிநீரின் தன்மை குறித்த புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. நகரில் உள்ள அமைத்து தொட்டிகளில் இருந்தும் பெறப்படும் தண்ணீரை - ராண்டம் முறையில் - பரிசோதிப்பது குறித்தும், குடிநீர் தொட்டிகளை தேர்வு செய்ய உறுப்பினர்கள் குழு அமைக்கவும், ஆணையர் யையெழுத்து பெற்று சேகரிக்கப்பட்ட குடிநீர் மாதிரியை அரசு ஆய்வுக் கூடங்களுக்கு அனுப்புவது குறித்தும், இச்சோதனைகளை மாதத்திற்கு 3 தொட்டிகள் என்ற அடிப்படையில் மேற்கொள்வது குறித்தும் மன்ற ஒப்புதல் பெறுவது.<br>3. தமிழக அரசின் IUDM திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் (Strom Water Drainage) திட்டத்திற்கு என மானியம் - காயல்பட்டணம் நகராட்சிக்கு இவ்வாண்டு வழங்கப்படவுள்ளது. அம்மானியம் மூலம் பணிகள் மேற்கொள்ள உள்ள இடங்களை தேர்வு செய்ய, துறை நிபுணர்களின் அறிக்கையின் அவசிய தேவை உள்ளது. ஆகவே - இத்துறையில் அனுபவமிக்க நிறுவனங்களிடம் இருந்து ஆய்வறிக்கை பெற ஒப்பந்தப்புள்ளிகள் கோர அனுமதி பெறுவது. | பொருள் எண் 15<br><br>1. வார்டு ஒன்றுக்கு ஒரு தகவல் பலகை என்ற அடிப்படையில் வார்: உறுப்பினர்களின் ஆலோசனை பெற்று தகவல் பலகை அமைக்கவும் மக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களை நகராட்சி வளாகம் பேருந்து நிலையம் தபால் நிலையம் மற்றும் கடற்கரையிலும் தகவல் பலகை அமைத்திட மன்றம் அனுமதி வழங்குகிறது<br>2. பரிசோதனை செய்ய மாதத்திற்கு 3 தொட்டிகளை தேர்ந்தெடுக்க உறுப்பினர்கள் கொண்ட குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது<br>3.மன்றம் அனுமதி வழங்குகிறது<br>4. கீழ்காணும் பணிகளை மன்றம் குறைந்த விலை பணிகளாக அங்கீகரிக்கிறது. இது தவிர கூடுதல் பணிகளை மன்றத்தின் அனுமதி பெற்று இப்பட்டியலில் இணைக்கவும் அனுமதி வழங்கப்படுகிறது<br><br>a. (i). JCB பணிகள்<br>(ii) சிறு கட்டுமான பணிகள் (small construxion work) |

| | | | |
|---|---|---|---|
| | | 4. நகர்மன்றத்தின் குறைந்தவிலை **(Low Value)** பணிகளை மேற்கொள்ள நிறுவனங்களை பதிவு செய்ய கோர மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான படிவத்தையும், விதிமுறைகளையும், கட்டணத்தையும் - மன்றம் முடிவு செய்வது குறித்து.<br>5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் காயல்பட்டணம் நகராட்சிக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவினை அறிந்திட மீட்டர் ரூம் அமைப்பது குறிததும், அதற்கான மீட்டர் கருவியை பெற்றிட டெண்டர் விடுவது குறித்தும் மன்றம் அனுமதி. | (iii) பெயிண்டிங் (painting works) பணிகள்<br>(iv) வீடியோ/புகைபடங்கள் பதிவு<br>(v) ஆடியோ சேவை (sound service)<br>(vi) நிகழ்ச்சிகளுக்கு ஷாமியானா நாற்காலி வழங்குவது போன்ற சேவை<br>(vii) மர வேலைகள;(carpending)<br><br>b. குறைந்த விலை பணிகளுக்கு சேவை வழங்கும் நிறுவனங்களுக்கான பொதுவிதிமுறைகள்<br>(i) சேவை வழங்குபவர் நிறுவனமாக இருக்கவேண்டும் தனிநபராக இருக்ககூடாது (ii) சேவை வழங்கும் துறையில் குறைந்தது/ஆண்டு அனுபவம் இருக்கவேண்டும் (iii) பதிவு கட்டணமாக ரூபாய் 250 செலுத்தவேண்டும்<br>(iv) ஆண்டுக்கு ஒருமுறை புதுப்பித்தல் (Reneval) ரூபாய் 250 செலுத்தவேண்டும்<br>(v) தேவை பற்றின அறிவிப்புகள் பதிவு செய்துள்ளவருக்கு தபால் மூலம் அனுப்பபடும்<br>(vi) சேவை வழங்குபவராக |

| | | | |
|---|---|---|---|
| | | | பதிவு செய்ய பெறப்படும் விண்ணப்பங்கள் நகர்மன்ற கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கலாம் (vii) சேவையில் திருப்தி இல்லை என்றால் நிறுவனத்தை பதிவில் இருந்து நீக்க மன்றத்திற்கு உரிமைஉண்டு (c ) குறைந்த விலைபணிகளை மேற்கொள்ள பதிவு செய்யும் புதுப்பிக்கும் நிறுவனங்களுக்கான படிவத்தினை மன்றம் ஏற்றுக் கொள்கிறது<br>5) நகர எல்லையில் இடம் தேர்வு செய்து மீட்டர் அறை அமைத்திடவும் மீட்டர் கருவி வாங்கிட டெண்டர் விடவும் மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 250 | **பொருள் எண் 16**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 29.05.2012 அன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட ஏலங்களுக்கு அதிக தொகை கேட்ட நபர்களுக்கு ஜாரி செய்திடவும் மேலும் அலுவலகம் மூலம் வாங்கப்பட்ட டேவனித் தொகையினை உரிய நபர்களுக்கு திரும்ப வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | பொருள் எண் 16<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

**காயல்பட்டணம் நகராட்சி பொது ஏலம்**

| வ.எண் | ஏல விபரம் | தொகை | ஏலதாரரின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகத்திலுள்ள தென்னை மரங்கள் மேல் மகசூல் உரிமம் ஏலம் | 755/- | காளிதாஸ்,<br>காயல்பட்டணம். |
| 2 | பேருந்த நிலையத்திலுள்ள தென்னை மர மேல் மகசூல் ஏலம் | 4030/- | காளிதாஸ்,<br>காயல்பட்டணம். |
| 3 | நகராட்சி அலுவலகத்தில் உபயோகப்படுத்தப்பட்ட தினசரி நாளிதழ் ஏலம் 31.03.2012 வரை சேகரிக்கப்பட்டது. | கிலோ 1-க்கு ரூ.9.00 | R.P.ராஜா,<br>காயல்பட்டணம். |
| 4 | நகராட்சி அலுவலகம் மற்றும் தெரு விளக்கு பயன்படுத்தப்பட்ட பழைய மின் சாதனங்கள் சோக்கு ஸ்டார்ட்டர் குழல் விளக்கு ஏலம் | 24500/- | R.S.கோபால்,<br>காயல்பட்டணம் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | நகராட்சி ஆடுமாடு அறுக்கும் தொட்டியில் சேகரிக்கப்பட்ட உதப்பை ஏலம். | 3450/- | சுரேஷ்குமார், காயல்பட்டணம். | | |
| | | | 6 | நகராட்சி குடிநீர் பிரிவில் பயன்படுத்தப்பட்டு மற்றும் பழுதடைந்த பொருட்கள் ஏலம் | கிலோ 1-க்கு ரூ.28.75 | R.P.ராஜ், காயல்பட்டணம். | | |
| | | | 7 | சுகாதார பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டு பழுதடைந்த பொருட்கள் ஏலம் | 6200/- | M.E.ஹபீபு ரஹ்மான். காயல்பட்டணம். | | |
| | | | **<u>காயல்பட்டணம் நகராட்சி மூடிமுத்திரையிடப்பட்ட ஏலம்</u>** | | | | | |
| | | | வ.எண் | ஏல விபரம் | தொகை | ஏலதாரரின் மற்றும் முகவரி | பெயர் | |
| | | | 1 | நகராட்சி மூலம் கட்டிடங்களில் அகற்றப்பட்ட ரப்பீஸ் ஏலம் | 45,000/- | R.P.ராஜ், காயல்பட்டணம். | | |
| | | | 2 | நகராட்சி அலுவலக வளாகத்திலுள்ள கிணற்றில் வாகனங்கள் மூலம் தண்ணீர் எடுக்கும் உரிமம் (காலை 6.00 முதல் மாலை 6.00 மணி வரை மட்டும்) | 1,01,101/- | காளிதாஸ், காயல்பட்டணம். | | |
| | | | 3 | நகராட்சி பேருந்து நிலையத்தில் | 1,52,700/- | சிங்கராஜ், | | |

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td></td><td>உள்ள 2 கிணறுகளில் வாகனம் மூலம் தண்ணீர் எடுக்கும் உரிமம்</td><td></td><td>காயல்பட்டணம்..</td><td></td></tr>
<tr><td>4</td><td>நகராட்சியின் ஆடு மாடு அறுக்கும் தொட்டி ஏலம்</td><td>1,81,700/-</td><td>S.விஜயன்,<br>ஆறுமுகநேரி.</td><td></td></tr>
<tr><td>5</td><td>நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தினசரி மார்கெட் ஏலம்</td><td colspan="2">எலம் ஒத்திவைப்பு</td><td></td></tr>
<tr><td>6</td><td>பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்</td><td>90,000/-</td><td>R.S.கோபால்,<br>காயல்பட்டணம்.</td><td></td></tr>
<tr><td>7</td><td>உப்பு ஓடை மீன்பிடி உரிமம் ஏலம்</td><td>25,000/-</td><td>T.நாரயணன்,<br>காயல்பட்டணம்.</td><td></td></tr>
</table>
அலுவலக குறிப்பு:-<br>
கூடுதல் தொகைக்கு கேட்டுள்ள நபர்களுக்கு ஏலம் ஜாரி செய்திடவும், மேலும் ஒரு வாரகாலத்திற்குள் ஏலத் தொகைய முழுவதையும் செலுத்தார ஏலதாரர்களின் ஏலத்தினை ரத்து செய்திடவும், மேலும் டேவணித் தொகையினை திரும்ப வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>251</td><td>பொருள் எண் 17<br>
காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் பழுதடைந்த சோடியம் விளக்குகள் சரி செய்வதற்கு தேவைபட்ட 3/20 வயர் காயல் ரூ. 1980/-க்கு வாங்கியதையும், 1-வது வார்டு கடையக்குடி தெரு விளக்கு பெட்டி சரி செய்வதற்கு ரூ.2010/-க்கு மொத்தம் ரூ.3990/-க்கு பொருட்கள் வாங்கிதையும் அதற்கான பட்டியல் தொகை J.K.ஹார்டுவேர்ஸ்க்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:-<br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>பொருள் எண் 17<br>மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 252 | **பொருள்எண் 18**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது நிதித்திட்டம் 2012-2013-ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளை செய்ய நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் | பொருள் எண் 18<br><br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | |
|---|---|---|
| 1 | கடையக்குடி நடுத்தெரு மேலத்தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் தார்ச்சாலை அமைத்தல் நீளம்:- 417மீ அகலம்:-3.75மீ | ரூ.9.00 இலட்சம் |
| 2 | பிலால்பள்ளி தெருவில் தார்த்தளம் அமைத்தல் நீளம்:-350 மீ அகலம்:-3.75 மீ | ரூ.7.00 இலட்சம் |
| 3 | ஈக்கி அப்பா தைக்கா தெரு முதல் சிங்கித்துறை மெயின் சாலை வரை மற்றும் கீழ நயினார் தெரு தார்ச்சாலை அமைத்தல் நீளம்:-650மீ அகலம்:-3.00 மீ | ரூ.13.00 இலட்சம் |
| 4 | மங்களவிநாயகர்கோவில் தெரு சாலை அமைத்தல் நீளம்:-120மீ அகலம்:-3.00 மீ | ரூ.4.50 இலட்சம் |
| 5 | நியூகாலனி தார்சாலை அமைத்தல் நீளம்:-500மீ அகலம்:-3.75மீ | ரூ. 10.00 இலட்சம் |

**அலுவலக குறிப்பு**
மன்றம் அனுமதி வழங்கலாம்

| | | | |
|---|---|---|---|
| | 253 | **பொருள் எண் 19**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சியின் பயன்பாட்டில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் மேல் மூடி (Manhole cover) இல்லாத தொட்டிகளில் மேல்மூடி வாங்குவதற்கு நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.30000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 19<br><br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 254 | **பொருள் எண் 20**<br>காயல்பட்டணம் நகராட்சியில் நகராட்சியின் தெரு விளக்குகளை பராமரிக்கும் பொருட்டு தேவையான மின் சாதனப் பொருட்களை வாங்குவதற்கு நகராட்சிப் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.95000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 20<br><br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 255 | **பொருள் எண் 21**<br>காயல்பட்டணம் நகராட்சி குடிநீர்விநியோக குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்ய ஓர் ஆண்டுக்கு (2012-2013) நகராட்சிப் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.300000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | பொருள் எண் 21<br><br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 256 | **பொருள் எண் 22**<br><br>காயல்பட்டணம் நகராட்சி அனைத்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு உட்புறம் மற்றும் வெளிப்புறம் வெள்ளையடிக்கவும் மற்றும் தொட்டிகளை சுத்தம் செய்யப்பட்ட நாட்களை பெயிண்ட்ங் செய்யவும் மழைகாலங்களில் காயல்பட்டணம் பகுதியில் மழைநீர்தேங்கியிருப்பதை அப்புறப்படுத்துவதற்கு Honda Oil Engine ஒன்று வாங்குவதற்கு மன்றம் அங்கீகரிக்க<br><br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 22<br><br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 257 | **பொருள் எண் 23**<br><br>நகராட்சியில் பணியாற்றும் தற்காலிக பணியாளர்கள் பலர் அவர்களின் பணிகளை சரிவர நிறைவேற்றுவது இல்லை பல குறைபாடுகள் அவர்கள் செயல்பாடுகளில் உள்ளது எனவே அத்தகைய பணியாளர்களை பணிநீக்கம் செய்துவிட்டு புதியவர்களை நியமிக்க ஆவண செய்யும்படி 1-வது வார்டு உறுப்பினர் திரு.ஏ.லுக்மான் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பரிசீலனை செய்ய | பொருள் எண் 23<br><br>தற்காலிக பணியாளர்களின் அலுவலக செயல்பாடு குறித்து ஆணையர் அறிக்கை தயார் செய்து விளக்கம் தர ஆணையரை கேட்டு கொள்வது என முடிவு செய்யப்பட்டது |
| | 258 | **பொருள் எண் 24**<br>அரசு நிறுவனமான DTCP நகரின் பூங்காக்களை மேம்படுத்த மானியம் வழங்க தயாராகவுள்ளது, மொத்த திட்ட மதிப்பீட்டியில் 10 சதவீதம் நகர்மன்றம் வழங்க வேண்டும், காயல்பட்டணம் கடற்கரையில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி.<br>1. பூங்காவில் குடிநீர் வசதி செய்தல் — ரூ.1.00 லட்சம்<br>2. பூங்காவில் பொது சுகாதார வசதி செய்தல் — ரூ.3.50 லட்சம்<br>3. பூங்காவில் நடைமேடை வசதி செய்தல் (தெற்கு) — ரூ. 9.00 லட்சம்<br>4. பூங்காவில் நடைமேடை வசதி செய்தல் (வடக்கு) — ரூ. 9.00 லட்சம்<br>5. . பூங்காவில் நடை ஓய்வு எடுக்கும் வசதி செய்தல் (வடக்கு) — ரூ.6.00 லட்சம்<br>6. வாறுகால் வசதி செய்தல் — ரூ. 8.00 லட்சம்<br>7. உயர்கோபுர மின்விளக்கு வசதி செய்தல் — ரூ. 12.00 லட்சம்<br>**ரூ.48.50 இலட்சம்** | பொருள் எண் 24<br>இது குறித்து நகராட்சி பொறியாளர்கள் தயாரித்துள்ள உத்தேச மதிப்பீடான 48.5 லட்ச ரூபாயில் 10% சதவீத தொகையை நகராட்சியின் பொது நிதியின் மூலம் வழங்க மன்றம் தீர்மானிக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு:-**<br><br>மன்றம் அனுமதி வழங்கலாம் | |
| | 259 | பொருள் எண் 25<br><br>நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடைகளுக்கான வாடகையை உயர்த்துவது குறித்தும் அவைகளை உரிமையாளர்கள் பிறர் அனுபவித்து வருவது குறித்தும் நீண்ட நாட்களாக பலர் வாடகை பாக்கி வைத்துள்ளது குறித்தும்-மே 2 அன்று சம்மந்தப்பட்ட குத்தகைகாரர்களுக்கு அழைப்பு விடப்பட்டு நகர்மன்றத்தில் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அரசு விதிகள்படி அவர்களுக்கு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அது குறித்து நகர்மன்றம் முடிவெடுப்பது<br><br>அலுவலக குறிப்பு<br><br>மன்றம் முடிவெடுக்கலாம் | பொருள் எண் 25<br><br>நகராட்சிக்கு பாத்தியபட்ட பேருந்து நிலைய வளாக கடைகள் மூலமும் நகராட்சிக்கு கிடைக்கப்பெறும் வாடகை சந்தை விலையை விட குறைவாக உள்ளது. மேலும் பல கடைகளில் கடைகளை குத்தகைக்கு எடுத்தவர் இல்லாமல் வேறொருவர் அனுபவித்து வரும் நிலையும் உள்ளது. மேலும் சில கடைகளுக்கான வாடகை பாக்கி பல மாதங்களாக செலுத்தப்படாமல் உள்ளது. இவைகளை கருத்திற்கொண்டு வாடகை பாக்கி வைத்துள்ள குத்தகைதாரர்களை உடனடியாக வாடகை பாக்கியை செலுத்த கூறியும் குத்தகைதாரர்களை தவிர்த்து வேறொருவர் கடைகளை அனுபவித்து வந்தால் அவரை இது சம்பந்தப்பட்ட அரசு ஆணைகளில் உள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | | விதிகள்படி பெயர்மாற்றம் செய்து கொள்ளும்படியும் மேலும் தற்போதைய சந்தை நிலவரப்படியான தொகையினை சதுர அடிக்கு ரூபாய் 16.50 என்ற வாடகையை பேருந்து நிலைய வளாக கடைகளுக்கும் சதுர அடிக்கு ரூபாய் 17.50 என்ற வாடகையை வணிக வளாக கடைகளுக்கும் இம்மன்றம் நிர்ணயிக்கிறது. இதற்கு சம்மதம் தெரிவிக்காத குத்தகைதாரர்களுக்கு விடப்பட்ட கடைகளுக்குான குத்தகையை ரத்து செய்து பொது ஏலம் மூலம் மீண்டும் கடைகளை குத்தகைக்கு வழங்க இம்மன்றம் தீர்மானிக்கிறது |